கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.

**OS.No. 396/2015**

திரு. மணிவண்ணன் (P.W –1) **24.2.2025**

<u>**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 5 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**</u>

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. இந்த தாவா முதலில் எப்போது தள்ளுபடி ஆனது என்றால் தெரியாது. அதன் பிறகு தாவாவை மீண்டும் கோப்புக்கு எடுக்க கோரி மனு தாக்கல் செய்திருந்த விபரங்கள் தெரியுமா என்றால் தெரியும். அந்த மனுவில் தாவா தள்ளுபடி ஆன விவரங்களை பற்றி சொல்லி உள்ளேன் என்றால் இல்லை. தாவா சொத்தை ஐந்தாம் பிரதிவாதி கிரயம் செய்த விபரங்கள் தெரியுமா என்றால் தெரியும். எப்போது தெரிந்து கொண்டேன் என்றால் ஐந்தாம் பிரதிவாதி 2019 ஆம் வருடம் தெரிவித்தார். ஐந்தாம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட கிரைய ஆவணத்தை பார்த்து உள்ளேன் என்றால் பார்த்துள்ளேன். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் தான் அந்த கிரைய ஆவணத்தில் சான்றிட்ட நகல் என்றால் சரி. அது பி.வா.சா.ஆ **–1.** அந்த ஆவணம் என்ன தேதியில் ஏற்பட்டுள்ளது என்றால் 30.6.2017. தற்சமயம் தாவா சொத்திற்குரிய பட்டா விவரங்களை பார்வையிட்டேனா என்றால் இல்லை. தாவா சொத்து க.ச.எண். 386/1, 385/3 ஈ என்றால் சரிதான். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணங்கள் தான் சொத்துக்களுக்கு உரிய பட்டா கணனி நகல் என்றால் சரி. அது பி.வா.சா.ஆ**–2**. அந்த ஆவணங்கள் ஐந்தாம் பிரதிவாதி வேல்முருகன் பெயரில் ஏற்பட்டுள்ளது என்றால் சரி.

2. தாவா சொத்தில் கட்டடம் உள்ளது என்றால் சரி. அந்த கட்டிடத்தில் கதவு எண் என்ன என்றால் கதவு எண் 2/367/1ஏ என்றால் சரி. அந்த சொத்துக்கு பெருந்துரை ஊராட்சியால் வரி விதிப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரி. தற்போது இடம் காண்பிக்கப்படும் இரண்டு வரி ரசீதுகளும் தாவா சொத்தில் உள்ள வீட்டிற்கு சம்பந்தப்பட்டவை என்றால் சரி. வரி விதிப்பில் 2876, 2024 – 2025 ஆம் ஆண்டிற்கு 29.6.2024 ஆம் தேதி செலுத்தப்பட்ட சொத்துவரி ரசீது

அசல் பி.வா.சா.ஆ– 3. அந்த ரசீது ஐந்தாம் பிரதிவாதி பேரில் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரி. தற்சமயம் ஏற்பட்டுள்ளது. தாவா சொத்தில் விவசாய மின் இணைப்பு எண் 572 என்றால் ஆமாம். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் அந்த மின் இணைப்பு 5ஆம் பிரதிவாதி பெயரில் மாற்றப்பட்டதற்கான உத்தரவு என்றால் சரி. அது பி.வா.சா.ஆ–**4** அதில் ஒரு தவறு உள்ளது 17.5.2019 ஆம் தேதி என் பெயரில் இருந்ததை வழக்கிற்காக ஐந்தாம் பிரதிவாதி அந்த மின் இணைப்பை அவர் பேரில் மாற்றி உள்ளார். தாவா சொத்தில் உள்ள வீட்டிற்கு தனியாக மின்னிணைப்பு உள்ளது என்றால் சரி. அந்த மின் இணைப்பு எண் 03218009177 என்றால் சரி. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் ஐந்தாம் பிரதிவாதி பெயரில் உள்ள மின் இணைப்பு ரசீது என்றால் சரி. அது பி.வா.சா.ஆ–5 இடையில் அவர் பெயரில் ஏற்பட்டுள்ளது. அதன் பிறகு நாங்கள் தான் மின் கட்டணத்தை செலுத்துகிறோம். திருப்பூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் ஐந்தாம் பிரதிவாதியை சேர்த்து மற்ற பிரதிவாதிகள் மீது அசல் வழக்கு எண் 29/2021 தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரி. அந்த வழக்கு நிராகரிக்கப்பட்டது என்றால் சரி.

3. அந்த தாவாவில் ஐந்தாம் பிரதிவாதியை தரப்பினராக சேர்த்து இந்த வழக்கு ஆவணங்களை தாக்கல் செய்து பரிகாரங்கள் கோரி இருந்தேன் என்றால் சரி. அந்த தாவாவில் ஐந்தாம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட கிரய ஆவணம் செல்லாது என்று பரிகாரம் கோரி இருந்தேன் என்றால் ஆமாம். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் திருப்பூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அசல் வழக்கு எண் 29/2021 பிராது சான்றிட்ட நகல் என்றால் ஆமாம். அது பி.வா.சா.ஆ–**6.** தாவா சொத்தில் 5ஆம் பிரதிவாதியின் சுவாதி இனத்தை இடைஞ்சல் செய்வதாக என் பெயரிலும் என் மனைவி பெயரிலும் என் உறவினர்கள் பெயரிலும் ஐந்தாம் பிரதிவாதி காவல் நிலையத்தில் புகார் செய்திருந்தார் என்றால் சரி. உண்மையில் தாவா சொத்தில் நாங்கள் தான் சுவாதீனத்தில் உள்ளோம். அந்த புகாரியின் அடிப்படையில் பல்லடம் காவல் நிலையத்தில் குற்ற எண் 57/2021 என்று முதல் தகவல் அறிக்கை பதிவானது

என்றால் சரி நாங்கள் கொடுத்த புகாரின் அடிப்படையில் குற்ற எண் 56/2021 பதிவு செய்யப்பட்டுள்ளது. குற்ற எண் 57/2021 அடிப்படையில் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு திருப்பூர் பல்லடம் குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரி. அதன் பிறகு தாவா சொத்தை அத்துமீறி நுழைந்து ஆக்கிரமிப்பு செய்து விட்டோம் என்றால் தவறு. அந்த புகாரில் உரிமையியல் நீதிமன்றத்தின் மூலமாகத்தான் என்னை காலி செய்ய முடியும் என்று நான் சொன்னதால் அந்த புகார் நிலுவையில் உள்ளது என்றால் தெரியாது.

4. அதன் பிறகு ஐந்தாம் பிரதிவாதி என் மீது திருப்பூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 231/2021 தாக்கல் செய்துள்ளார் என்றால் சரி. அந்த தாவாவில் ஐந்தாம் பிரதிவாதி தாவா சொத்தில் உள்ள வீட்டில் சுவாதீன பரிகாரம் ஒப்படைக்க கோரியின் அதை தவிர மற்ற விவசாய பூமியில் ஐந்தாம் பிரதிவாதியின் சுவாதீனத்தை நாங்கள் இடைஞ்சல் செய்யக்கூடாது என்று நிரந்தர ஊறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இருந்தார் என்றால் சரி. அந்த வழக்கில் இடைக்கால மனு எண். 445/2022 ஐந்தாம் பிரதிவாதி தாக்கல் செய்திருந்தார் என்றால் ஆமாம். இடைக்கால மனு எண். 445/2022 ல் முழு விசாரணைக்கு பிறகு தாவா சொத்தில் உள்ள வீட்டைத் தவிர மற்ற விவசாய பூமியில் ஐந்தாம் பிரதிவாதியின் சுவாதீனத்தை நாங்கள் இடைஞ்சல் செய்யக்கூடாது என்று இடைக்கால உத்தரவு ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரி. அதன் பிறகு ஐந்தாம் பிரதிவாதி அவருடைய சுவாதீனத்தை இடைஞ்சல் செய்ததாக ஏழு முறை காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார் என்றால் சரி. நாங்களும் கொடுத்துள்ளோம். தாவா சொத்தில் உள்ள விவசாய பூமியில் கிரைய ஆவணத்தின் அடிப்படையில் இன்றுவரை ஐந்தாம் பிரதிவாதி தான் சுவாதின அனுபவத்தில் இருந்து அனுபவம் செய்து வருகிறார். அவர் அதில் எங்களுக்கு எந்த உரிமையோ பாத்தியமோ இல்லை என்றால் தவறு. தாவா சொத்தில் உள்ள வீட்டில் எங்களுக்கு எந்த உரிமையும் பாத்தியமும் இல்லை. அத்துமீறி நுழைந்து அந்நியாய சுவாதினத்தில் அனுபவம் செய்து வருகிறேன் என்றால் தவறு.

தாவாவில் கோரியுள்ள பரிகாரங்கள் கிடைக்கதக்கதல்ல தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. ஐந்தாம் பிரதிவாதி தாவா நிலுவை இல்லாத சமயத்தில் தாவா சொத்தை கிரையம் பெற்றுள்ளதால் நல்லெண்ணத்தின் பேரில் கிரயம் பெற்ற நபர் என்பதால் அவருக்கு எதிராக எந்த பரிகாரமும் நான் பெற முடியாது என்றால் சரியல்ல.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2025.02.24 14:56:39 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.